**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மனிதவள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ்**
**மட்டம்: 02**
**HRC 2404: மனிதவள முகாமைத்துவத்துக்கான தீர்மானம் எடுக்கும் கருவிகள்**
**இறுதிப் பரீட்சை - 2024/2025**
**காலம் - மூன்று (03) மணித்தியாலங்கள்**

0120

**திகதி: 19/10/2024** **நேரம்: 01.30 pm to 04.30 pm**

## அறிவுறுத்தல்கள்:

- இந்த வினாத்தாள் ஏழு (07) வினாக்களை கொண்டுள்ளது. அனைத்து வினாக்களும் சமமான புள்ளிகளை கொண்டது. ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக.
- வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் விடையளிக்குக
- ஒழுங்கற்ற கையெழுத்து குறைவான புள்ளிகளுக்கு வழிவகுக்கும்

<u>வினா இல 1</u>

1,000 ஊழியர்களைக் கொண்ட ஒரு பெரிய நிறுவனத்தில் ஊழியர்களின் சராசரி ஆண்டு சம்பளத்தை தீர்மானிக்க நீங்கள் ஒரு கணக்கெடுப்பை நடத்துகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். மேலே உள்ள கணக்கெடுப்புக்காக பெறப்பட்ட 50 ஊழியர்களின் மாதிரிக்கான (Sample) வருடாந்திர சம்பளம் (ஆயிரங்களில்) கீழே பட்டியலிடப்பட்டுள்ளன: (*'000*கள்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26 | 64 | 34 | 72 | 34 | 24 | 41 | 27 | 77 | 27 |
| 40 | 52 | 73 | 25 | 63 | 53 | 75 | 46 | 56 | 33 |
| 63 | 73 | 80 | 79 | 34 | 34 | 30 | 75 | 67 | 54 |
| 55 | 80 | 41 | 28 | 74 | 33 | 33 | 49 | 41 | 31 |
| 71 | 40 | 50 | 52 | 31 | 22 | 65 | 26 | 44 | 67 |

அ) மேற்கண்ட தரவுகளுக்கு பின்வருவனவற்றை உருவாக்கவும்.

i. நிகழ்வெண் பரவல் அட்டவணை (**Frequency Distribution Table**)
(சம அளவு வகுப்பு இடைவெளிகளை 0 முதல் 10 வரை, 10 முதல் 20 வரை *etc* என கருதுங்கள்) **(6 மதிப்பெண்கள்)**

ii. ஹிஸ்டோகிராம் (**Histogram**) **(5 மதிப்பெண்கள்)**

iii. அதிர்வெண் பலகோணம் (**Frequency Polygon**) **(2 மதிப்பெண்கள்)**

ஆ. பகுதி அ-(*i*) இல் நீங்கள் பெற்ற நிகழ்வெண் பரவல் *அட்டவணைக்கான* **(Frequency Distribution Table)** பின்வரும் அளவீடுகளை மதிப்பிடுங்கள்.

*i.* சராசரி **(Mean)** **(3 மதிப்பெண்கள்)**
*ii.* இடைநிலை **(Median)** **(4 மதிப்பெண்கள்)**
*iii.* முகடு **(Mode)** **(3 மதிப்பெண்கள்)**
*iv.* வீச்சு **(Range)** **(2 மதிப்பெண்கள்)**

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

**வினா இல 2**

அ) நிருவனமொன்றின் மனிதவள முகாமையாளர் ஊழியரின் செயல்திறன் அடிப்படையில் மூன்று ஊழியர்களுக்கு போனஸ் **(Bonus)** பகிர்ந்தளிக்க ரூபா.**8000** கொண்ட பாதீடு ஒன்றை கொண்டுள்ளார். இரண்டாவது ஊழியர் முதல் ஊழியரை விட இரண்டு மடங்கு அதிகமாகவும், மூன்றாவது ஊழியர் இரண்டாவது ஊழியரை விட **500** ரூபா குறைவாகவும் பெறும் வகையில் போனஸ் ஒதுக்கப்படும். ஒவ்வொரு ஊழியரும் பெறும் போனஸ் தொகையை தீர்மானிக்கவும். **(10 மதிப்பெண்கள்)**

ஆ) ஒரு நிறுவனம் தனது ஊழியர்களுக்கான பயிற்சி அமர்வுகள் ***(training sessions)*** மற்றும் பட்டறைகளின் ***(workshops)*** செலவை தீர்மானிக்க முயற்சிக்கிறது. *3* பயிற்சி அமர்வுகள் மற்றும் *4* பட்டறைகளுக்கு சேர்த்து ரூ.*25,700* செலவாகும் என்றும், *4* பயிற்சி அமர்வுகள் மற்றும் *3* பயிற்சிப் பட்டறைகளுக்கு சேர்த்து ரூ.*32,400* செலவாகும் என்றும் அவர்களுக்குத் தெரியும். ஒரு பயிற்சி அமர்வுக்கான செலவு மற்றும் *10* பட்டறைகளுக்கான மொத்த செலவைக் காண்க. **(15 மதிப்பெண்கள்)**

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

**வினா இல 3**

அ) ஒரு நிறுவனம் ஒரு மாதத்தில் வாங்கிய மூலப்பொருளின் தரத்தை ஆய்வு செய்ய விரும்புகிறது, மேலும் ஒவ்வொரு வகையிலிருந்தும் 25% பொருளை சோதிக்க முடிவு செய்துள்ளது. நிறுவனம் தற்போது 3 மூலப்பொருட்களைப் (A, B, C) பயன்படுத்துகிறது, மேலும் கையிருப்பிலுள்ள மூலப்பொருட்கள் முறையே A, B மற்றும் C இலிருந்து 400 அலகுகள், 320 அலகுகள் மற்றும் 480 அலகுகள் ஆகும்.

i. முழுமைத் தொகுதி அளவு ***(population size)*** மற்றும் மாதிரி ***(sample size)*** அளவு என்ன? **(4 மதிப்பெண்கள்)**

*2.* மூலப்பொருளின் எளிய தற்போக்கான பதக்கூறை **(simple random sample of raw material)** எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதை விளக்குக. **(6 மதிப்பெண்கள்)**

*3.* மூலப்பொருளின் புலம்பகுத்து பதக்கூறை (***stratified sample of raw material)*** எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதை விளக்குக. **(9 மதிப்பெண்கள்)**

ஆ)பின்வரும் மாறிகளை (*variables)* எண்ணியல் (***numerical)/*** வகையினம் ***(categorical)*** என வகைப்படுத்தி அவற்றின் அளவீடுகளின் அளவுகளை / ***scales of measurements*** அடையாளம் காணவும்.

**(6 மதிப்பெண்கள்)**

i. முடி நிறம்

*ii.* தேர்வுக்காகப் பெற்ற தரம்

*iii.* மாத வருமானம் *(*ருபாயில்*)* **( மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

**<u>வினா இல 4</u>**

அ) ஒரு வணிகத்தின் ஒட்டுமொத்த மதிப்பிற்கு அருவ சொத்துக்கள் (***intangible assets)*** ஏன் முக்கியம்*?* **(10 மதிப்பெண்கள்)**

ஆ) ஒரு வணிகத்தின் செல்வத்தை (***business's wealth)*** முகாமைப்படுத்துவதற்கான சில தந்திரோபாயங்களை விளக்குக. **(15 மதிப்பெண்கள்)**

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

**<u>வினா இல 5</u>**

அ) ஒரு நிறுவனத்தில் செல்வத்தை உருவாக்குவதற்கு (***wealth creation)*** வாடிக்கையாளர் திருப்தி ஏன் முக்கியமானது, மற்றும் அதற்கு மனித வளங்கள் எவ்வாறு பங்கு வகிக்கின்றன*?* **(10 மதிப்பெண்கள்)**

ஆ)மனித வளங்களை கொண்டு விளைதிறனான தந்திரோபாயங்களை நடைமுறைபடுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குக **(15 மதிப்பெண்கள்)**

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

**வினா இல 6**

அ)ஒரு பாதீட்டை (*budget)* உருவாக்கும் போது மனிதவள முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிப்பது ஏன் முக்கியமானதாகும் *?* **(10 மதிப்பெண்கள்)**

ஆ)விளைதிறனான பாதீட்டுக்கான (*budget)* தொடர்பாடல் மற்றும் கண்காணிப்பிற்கான முக்கியத்துவத்தை விளக்குக.

**(15 மதிப்பெண்கள்)**

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

**வினா இல 7**

மனித வள கணக்கியல் (*Human Resource Accounting)* என்பது ஒரு நிறுவனத்தின் மனித மூலதனத்தின் மதிப்பை அளவிடுவதில் கவனம் செலுத்தும் ஒரு சிறப்புத் துறையாகும். மனித வள கணக்கியலை பாரம்பரிய கணக்கியலிலிருந்து வேறுபடுத்துக. மேலும் மனித மூலதனத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அணுகுமுறைகளைப் பற்றி விளக்குக. அதனோடு, ஒரு நிறுவனத்தில் மனித வள கணக்கியலை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முக்கிய சவால்களை விளக்குங்கள்.

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

**(25 மதிப்பெண்கள் * 04 வினாக்கள் = மொத்தம் 100 மதிப்பெண்கள்)**

-முழுபதிப்புரிமை பெற்றது-

**Appendix**

Mean = $\bar{x} = \frac{\Sigma f x}{\Sigma f}$

Median $L + \frac{n/2 - F}{f} * c$ =

Mode = $L + \frac{d_1}{d_1 + d_2} * c$